தமிழ் திரையிசைப் பாடல்கள்:
சமூக மாற்றமும் விழிப்புணர்வும்

பதிப்பாசிரியர்
முனைவர் நா. குமாரி

தொகுப்பாசிரியர்
முனைவர் சே.திருநாவுக்கரசு

அகில் பதிப்பகம்
சென்னை

பதிப்பாண்டு : செப்டம்பர் 2026

தமிழ் திரையிசைப் பாடல்கள்:
சமூக மாற்றமும் விழிப்புணர்வும்

பதிப்பாசிரியர் : **முனைவர் நா. குமாரி**

தொகுப்பாசிரியர் : **முனைவர் சே. திருநாவுக்கரசு**

* பக்கம் : 358
* அளவு : டெம்மி, 12.5 புள்ளி
* தாள் : என்.எஸ்.புக் பிரிண்ட்
* அச்சு : வசந்தம் அச்சகம், சென்னை.
* நூல் வடிவமைப்பு : சு.ரேகா
* அட்டை வடிவமைப்பு : கா.பாத்திமா

வெளியீடு

அகில் பதிப்பகம்

நெ. 44/2, நாயக்கமார் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை- 33.

தொலைபேசி : 9080980607

ISBN : 978-81-69145-11-4

விலை : ரூ.400 /-

31. வைரமுத்துவின் கரிசல் சார்ந்த திரையிசைப் பாடல்கள் உணர்த்தும் மக்களின் வாழ்க்கை நிலை - ஓர் ஆய்வு 315
முனைவர் **ச. இரா. செம்மலர்**

32. தமிழ் திரையிசைப் பாடல்களில் மருதத் திணைக் கூறுகள் 326
இரா. வசந்தகுமாரி

33. திரையிசைப் பாடல்களும் கிராமிய மக்களும் 337
முனைவர் **நா. தீபாராணி**

31. Tamil Literary Traditions in Contemporary Film Songs 351
Dr. Hari Kumar T

திரையிசைப் பாடல்களும் கிராமிய மக்களும்

முனைவர் **நா. தீபாராணி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப மற்றும்
உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம் சென்னை.

முனைவர் **பொ.குபேந்திரன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப மற்றும்
உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை.

முன்னுரை

திரையிசைப்பாடல்களானது கிராமிய மக்களின் இயல்புகளையும். அன்றாட வாழ்வாதாரத்தையும் மக்களின் எதார்த்தமான வாழ்வின் நிகழ்வுகளை பற்றியும் அவர்களின் அனைத்து சமுதாய சடங்குகள் பற்றியும் அறிந்து கொள்ள எவ்வாறு துணை புரிகிறது என்பதை இக்கட்டுரை ஆராயப்படுகிறது.

மனித சமுதாயத்தின் பிறப்பு முதல் இறப்பு வரையில் பாடப்படும் நாட்டுப்புறப்பாடலானது திரைப்படங்கள் மூலம் கிராம மக்களுக்கு தேவையான கருத்துக்களை அவர்களின் சூழலுக்கு ஏற்றப்படி எவ்வாறு விதைக்க வேண்டும் என்பதையும், திரைப்படங்கள் என்னும் தொடர்பு சாதனத்தின் மூலம் பாமர மக்களுக்கு எளிதில் புரியும்படியான எளிய முறையில் தன் பாடல்கள் மூலம் எவ்வாறு கொண்டு சேர்க்கிறது என்பதையும் ஆராயப்படுகிறது.

மனிதன் கேட்கும் முதல் பாடலான தாலாட்டானது குடும்ப சூழல் சமுதாய சூழ்நிலை போன்றவற்றை கூறி தாலாட்டப்படுகிறது. இத்தாலாட்டு குழந்தைகள் நல்லவர் களாகவும், வல்லவர்களாகவும் வளர வேண்டும் என்ற நோக்கத்தோடு திரைப்படங்களில் பாடப்படுகிறது இப்பாடல் களானது குழந்தை பருவத்திலேயே சொல்லிப் பாடுவதால் இளமை பருவத்திலேயே சமுதாய கருத்தினை விதைக்க வேண்டும் என்ற முயற்சியை திரைப்படப்பாடல்கள் செய்கிறது என்பதை ஆராயப்படுகிறது. மேலும் சமுதாயத்தில் பெண்ணின் பெருமையை எடுத்து கூறும் போது பெண்களின் பொறுமை, பெண்ணின் தாய்மை பற்றியும் குழந்தைகளுக்கு அவள் செய்ய வேண்டிய கடமை எது? என்பது போன்ற பல்வேறு கருத்துக்களை திரையிசைப் பாடல்கள் மூலம் சிந்தனை செய்யவும் சமுதாய பணியாற்றவும் சமுதாயத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்லவும் செய்கிறது என்பதையும் ஆராயப்படுகிறது.

சமுதாய மக்கள் வாழும் சூழல்கள் நிறைந்த நாட்டுப்புற கதைக்கு தகுந்தார் போல நாட்டுப்புறப்பாணியில் கருத்துமிக்க பாடல்களை இயற்கையோடு ஒட்டி செல்லக்கூடிய பாடல்களானது சமூக வளர்ச்சியை மனதில் கொண்டு எவ்வாறு பாடப்பட்டன என்பது ஆராயப்பட்டுள்ளது. விவசாயமானது மக்களின் அடிப்படை தேவையான உணவுப் பற்றிய பல்வேறு தேவையினை சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு தனி மனிதனும் சிந்தித்து செயல்பட வேண்டும் என்பதையும், கூட்டுப்பண்ணையின் அவசியம், மற்றும் நாட்டு வளம், விவசாயியின் வாழ்வாதாரத்தின் அவசியம், போன்ற கருத்துக்களை மனதில் கொண்டு திரைப் படங்கள் எவ்வாறு எடுக்கப்பட்டன என்பதை விளக்கப்படுகிறது.

திரையிசையில் நாட்டுப்புறப் பாடலும் கிராமிய மக்களும்

கிராம மக்கள் அல்லது நாட்டுப்புற மக்கள் என்று அழைக்கப்படும் சமுதாய மக்கள் தங்களது வாழ்க்கையை

என்னும் இப்பாடல் பட்டி தொட்டிகளில் எல்லாம் புகழ்பெற்றது.

எம்.ஜி.ஆர் அவர்களை பாமரர்கள் நடுவில் நிலைக்கச் செய்துவிட்ட பாடல் என்று கூறப்படுகிறது. பாடல் பாடியவர் யாராக இருப்பினும், ஜி.ராமநாதன் இசையில் மக்களிடையே எம்.ஜி.ஆரை நினைக்க தோன்றியதாக இருந்தது.

திரையிசைப் பாடல்களில் நாட்டுப்புற பாணியில் பாடியது ரசிகர்களான பாமர மக்களுக்கு, மகிழ்ச்சியூட்டும் மூலம் அமர்க்களப் படுத்தியவர். டி.எம்.எஸ் உச்ச ஸ்தாயிலேயே நிலைத்து ஜாலம் செய்த பாடல் சிரஞ்சீவி வரம் பெற்று விட்ட பாடல் என்று கூறப்படும்.

“ஏரிக்கரை மேலே போறவளே பெண்மயிலே” (ஆரபி ராகம்)

விவசாய மக்களின் வாழ்க்கை முறையை காலத்தால் வென்று விட்ட பாடலாக கேட்கமுடிகிறது.

படம் முதலாளி இசை கே.வி.மகாதேவன்

பாடல் கா.மு.ஷெரீப்

குரல் டி.எம்.சௌந்தரராஜன் குரலில்,

“போறவளே போறவளே பொன்னுரங்கம்”

“ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா”

போன்ற பாடல்களும் மேலும்,

வளரும் நகர, குடும்ப, கதைகளுக்கு புதிய ஆரம்பமாக அந்த காலசூழ்நிலைக்கு ஏற்ப நகர மனப்போக்கை ஒட்டி செல்லும் படங்களுக்கு வித்திட்டது.

சிவாஜிகணேசன் உணர்ச்சி பொங்கும் நடிப்போடு இயல்பான கருத்துக்களை ரசிகர்களை கட்டிப்போட்டது.

கே.வி.மகாதேவன் இசையமைப்பில் தனித்தன்மையோடு மக்களால் கேட்க முடிந்தது.

'படிக்காத மேதை' பட தலைப்பை ஊர்ஜிதப் படுத்தும் வகையில்

"படித்ததினால் அறிவு, பெற்றோர் ஆயிரம் உண்
பாடம் படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு"

என்னும் 'உருமி' மேள பிண்ணனியில் சக்கர வாகத்தில் எம்.எஸ்.ராஜேஸ்வரிக்கு

மறக்கமுடியாத வாய்ப்பினை கொடுத்தவர் கே.வி.மகாதேவன்.

"ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா"

மேலும்

"சீவி முடிச்சு சிங்காரிச்சு"

"ஆடிப்பிழைத்தாலும் பாடிப்பிழைத்தாலும்
அன்பும் பண்பும் எல்லையடி"

பி.லீலா பாடிய பாடல்

"உள்ளதை சொல்வேன் சொன்னதை செய்வேன்
வேறொன்றும் தெரியாது"

சமூக கருத்துக்களை நாட்டுப்புற பாணியில் இயல்பாக திரையிசை கொண்டு சேர்க்கிறது.

LILID ஆளுக்கொரு வீடு

இசை விஸ்வநாதன்-ராமமூர்த்தி

பாடல் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் குரல் ஜமுனாராணி, ரேணுகா

"செய்யும் தொழிலே தெய்வம் அந்தத்
திறமைதான் நமது செல்வம்"

என்னும் பிரபல பாடலை பாடிய வரிகளில்,

"காயும் ஒரு கனியாகும் -நம்
கனவும் ஒரு நாள் நனவாகும்
காயும் கனியும் விலையாகும் நம்
கனவும் நினைவும் நிலையாகும்
உடல் வாடினாலும் பசி மீறினாலும்
வழி மாறிடாமலே வாழ்ந்திடுவோம்"

மற்றும் ஒரு பாடலில்,

"ஊருக்கெல்லாம் ஒரே சாமி
ஒரே நீதி ஒரே நீதி
ஒரே சாதி கேளடி கண்ணாத்தா"

என்று கே.ஜமுனாராணி எல்.ஆர்.ஈஸ்வரி பாடிய பாடலில்

"உயிருக்கெல்லாம் ஒரே பாதை
ஒரே பாதை ஒரே வாசல்
ஒரே கூடு ஒரே ஆவி"

என்று கருத்துக்களை அடிக்கி கொண்டே போவார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

படம் பழனி 1965

இசை - விஸ்வநாதன் ராமமூர்த்தி

முடிவுரை

திரையிசை பாடல்களில் கிராமிய வாழ்க்கையைஎவ்வாறு மிக அழகாக இசையப்பாளரும் பாடல் எழுதுபவர்களும் எடுத்து கூறியுள்ளனர்.. குடும்பத்தில் வெளிப்படுகின்ற நாட்டார் கூறுகளில் அதாவது பழமொழிகளில் நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டு எவ்வாறு காந்திய மக்களின் வாழ்வியல் வெளிப்படுகிறது அதேபோன்று திரை இசை பாடல்களையும் நம் மக்களின் நன்றிகளை அமர்ந்து கூறியுள்ளார்.